மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 2
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹണ്ഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**டிசம்பர் 2010**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2010 டிசம்பர்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன்.

மீகா 7 : 15.

**ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்.**





தொழுநோயாளர் காலனியில் வசிக்கும் ஏழைகளில் 6 குடும்பங்கள் மழையில் முழுவதும் ஒழுகும் தங்கள் வீட்டின் மேற்கூரையை மாற்றி, **புதிதாக கூரை** போட்டு தரும்படி கேட்கிறார்கள். ஜெபியுங்கள்! உதவுங்கள்!

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்



## TVGM ஸ்தாபகரிடமிருந்து . . .

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,

***என் அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!***

2010ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை கிருபையாக வழிநடத்தின தேவாதி தேவனைத் துதிக்கிறேன்.

கர்த்தர் செய்த நன்மைகளை எண்ணி எண்ணி துதியுங்கள்.

கடந்த மாதத்தில் "**நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்**" என இயேசு தன்னுடைய சீஷர்களுக்குக் கூறின ஆலோசனையை எழுதியிருந்தேன். அப்.1:8 கூறுகிறது: "**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.**"

இன்று இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து நீங்களும், நானும் சாட்சிளாக எழும்ப வேண்டியது அவசியமாக உள்ளது.

பவுல் கூறுகிறபோல "**நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன் றையும் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக.** கலா. 6 : 14"

"**பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்**" என்ற நற்செய்தியும், **இயேசுகிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தம், மனந்திரும்புதல், பாவமன்னிப்பு** ஆகியவை ஒவ்வொரு கிராமம் கிராமமாக, பட்டணம் பட்டணமாக அறிவிக்கப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது.

இயேசு இந்த உலகத்திற்கு வந்து 2010 ஆண்டுகள் முடிந்தும் **இயேசு என்றால் என்ன விலை ?** என்று கேட்கும் எத்தனையோ பாமரமக்கள்! இவர்களுக்கு நீங்களும் நானும் தான் சாட்சிகள்.

இதற்காகவே 100–கிராம ஊழியம், பின்தொடர்பணி ஊழியம், பயிற்சி நிலையங்கள், ஜெபவீடு கட்டுதல், சிறுவர் இல்லம் நடத்துதல், தையற்பள்ளிகள், தொழுநோயாளர், பார்வையற்றோர், விதவைகள் ஊழியங்கள் நடைபெற்று வருகிறது. **இயேசுவுக்கு சாட்சியாக** ஏதாவது ஒரு பணியில் உங்களை இந்த கிறிஸ்மஸ் நாட்களில் ஈடுபடுத்திக் கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

"**சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களை விவரித்துச் சொல்லுங்கள்**" . கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்,

**தேதி :** 08.11.2010

P.T. **கிறிஸ்டோபர்.**

இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

**TAMIL VILLAGE GOSPEL MISSION**

CHIEF EXECUTIVE OFFICER **Letter Dated:08.11.10**

# WE WISH YOU A HAPPY CHRISTMAS



**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களுக்கு,**

**"கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது"** என்ற வசனத்தின்படி கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நமக்கு நல்லவரா கவும், கிருபை பொருந்தியவராகவும் இருந்ததற்காக ஸ்தோத்திரம்.

**பாஸ்டர் விக்கி** அவர்கள் அக்டோபர் மாதத்தில் அழைத்து வந்த **ஏலீம் மிஷன் குழுவினர்** மூலம் அநேகருடைய ஊழியங்களை பார்வையிடவும், ஐக்கியம் கொள்ளவும் கர்த்தர் கிருபை செய்தார்.

2010மே மாதம் என்னுடைய திருமணத்திற்கு பின்பு, நானும், என் மனைவியும் நவம்பர் மாதத்தில் **இந்தோனேஷியா, சிங்கப்பூர்** தேசங்களில் ஊழியம் செய்வதற்கு தேவன் கிருபை செய்தார்.

நம் தேசத்தில் உயர்மட்ட அளவில் வேலை செய்துகொண்டே சேவை செய்வதற்கு **அநேக கிறிஸ்தவ தலைவர்கள் எழும்ப வேண்டும்** என்ற வாஞ்சை எங்களுக்குள் அதிகமாக பெருகி வருகிறது. இதற்காகவே The Ambassador School of Learning (TASOL)என்ற ஸ்தாபனத்தை 2010 மார்ச் 17ல் அரசாங்கத்தில் பதிவு செய்து, முதல்கட்டமாக **நிலம் வாங்கும் பணியில்** ஈடுபட்டுள்ளோம். TASOL தரிசனத்தை பூர்த்தி செய்ய **"உயர்மட்ட அளவில் கிறிஸ்தவ அதிகாரிகள் நாட்டிற்கு தேவை "** என்ற **தரிசனம் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகள்** எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

கிறிஸ்துவின் பணியில்,

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

# உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன். மீகா 7 : 15

கிறிஸ்மஸ் சிறப்பு செய்தி

**சகோ.P.T. கிறிஸ்டோபர் – TVGM ஸ்தாபகர்.**

**சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள். சங்.96 : 3**

**TVGM, TASOL குடும்பத்தினர் அனைவருக்கும் என் அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்!**

***WE WISH YOU A HAPPY CHRISTMAS 2010***

இயேசுகிறிஸ்துவின் பிறப்பை, விமரிசனமாக கொண்டாட ஆயத்த மாகிக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே!

**கொண்டாடுங்கள் கொண்டாடுங்கள் !**
**அனுதினமும் கொண்டாடுங்கள் !**
**இயேசுவின் பிறப்பை கொண்டாடுங்கள் !**
**இயேசுவின் இரத்தத்தை கொண்டாடுங்கள் !**
**இயேசுவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடுங்கள் !**
**இயேசுவின் வருகையைக் கொண்டாடுங்கள் !**

இந்த மாதத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் **வாக்குத்தத்தம் : மீகா 7: 15 உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்.**

இதே நேரத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் கட்டளை: **சங். 96 :3**

**சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்.**

ஏனெனில் வேதம் சொல்கிறது: **ஏசா.9:6**

**நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர்.**

இயேசு அதிசயமானவராக இருப்பதால் **உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவார்.** ஆதலால் **அவருடைய அதிசயங்களை ஜனங்களுக்குள்ளே விவரித்துக் சொல்ல,** இன்றே ஒரு பொருத்தனைச் செய்து கொள்ளுங்கள்.

எத்தனையோ பொருத்தனைகளை செய்தீர்கள். ஆனால் **"சகல ஜனங்களுக்குள்ளும் இயேசுகிறிஸ்துவினுடைய அதிசயங்களை விவரித்துச் சொல்லுவேன்"** என பொருத்தனை செய்தீர்களா?

இந்த கிறிஸ்மஸ் காலங்களில் **"இயேசுவின் அதிசயங்களை விவரித்துச் சொல்லுவேன்"** எனப் பொருத்தனை செய்து கொள்ளுங்கள்.

அப்பொழுது கர்த்தர் **"உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவார்"** ஆமென்!

இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து சற்று சிந்திப்போமா ?

இயேசு பிறப்பின்போது இரண்டு கூட்ட மக்கள் இயேசுவை தரிசிக்க செல்கிறார்கள்.

***முதலாவது மேய்ப்பர்கள்.***

***இரண்டாவது சாஸ்திரிகள்.***

முதலாவது **மேய்ப்பர்களைப்** பற்றி பார்ப்போம் : **லூக்கா 2: 8 – 11.**

அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான், கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள்.

தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே!

“**கிறிஸ்மஸ்**” என்றாலே “**நற்செய்தி**” உங்கள் ஞாபகத்திற்கு வரட்டும்.

“**நற்செய்தி**” என்ன ? கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் பிறந்திருக்கிறார். வேதம் சொல்கிறது : **1தீமோ.1:15**

**பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.**

பாவம் செய்த ஆத்துமாக்களை பாவத்திலிருந்து விடுதலை செய்யும்படியாகவும், பாவமன்னிப்பு வழங்கும்படியாகவும் இயேசு உலகத்திற்கு வந்தார்.

இயேசு கூறினார் : **மத்தேயு 11 : 28**

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! **நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்;** நான் உங்களுக்கு **இளைப்பாறுதல்** தருவேன்.

இந்த அழைப்பானது இயேசுவை அறியாதவர்களுக்கு மட்டுமல்ல, இயேசுவை அறிந்த உங்களுக்கும் சொந்தமானது.

கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்த சகோதரனே, சகோதரியே! கர்த்தருடைய ஊழியக்காரனே, ஊழியக்காரியே!

உங்களைத் தான் இயேசு அழைக்கிறார்.

இயேசு கூறினார் : **யோவான் 6 : 37**

**என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.**

ஆம், விசுவாசியே! ஊழியரே! உங்களை தேவன் புறம்பே தள்ளமாட்டார்.

எந்த வகையான பாரத்தினால் நீங்கள் சோர்ந்துபோயிருக்கிறீர்கள். உங்கள் உள்ளம் உடைந்து போயிருக்கிறது. உங்களுக்கு ஓர் நற்செய்தி.

இயேசுகிறிஸ்துவினிடத்தில் வருகிறவர்களை அவர் புறம்பே தள்ளுவதில்லை.

மேலும் **மேய்ப்பர்களைப் பற்றி சற்று சிந்திப்போம்.**

தேவதூதர்கள் இயேசு பிறப்பின் நற்செய்தியை அறிவித்து விட்டு பரலோகம் சென்று விட்டார்கள்.

மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி: நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், **நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம்** வாருங்கள் என்று சொல்லி தீவிரமாய் வந்து பார்த்தார்கள்.

பார்த்தது மாத்திரமல்ல, அந்தப் பிள்ளையைக் குறித்து தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் **பிரசித்தம் பண்ணினார்கள்** ( லூாக். 2 : 15 – 17 ).

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே! இயேசு பிறந்த முதல்நாளிலே மேய்ப்பர்கள் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை கேட்டார்கள். தீவிரமாய் வந்து இயேசுவை பார்த்தார்கள். **தங்களுக்குச் சொல்லப் பட்ட இயேசுவின் நற்செய்தியை பிரசித்தம் பண்ணினார்கள்.**

**பக்தன் பாடுகிறார் :**

***ஊரெல்லாம் சொல்லிடுவேன்***
***உலகமெங்கும் பறைசாற்றுவேன்***
***ஜீவிக்கிறார் என் இயேசு***
***சீக்கிரமாய் வந்திடுவார்***
***சர்வ வல்லவர் என் சொந்தமானார்***
***சாவை வென்றவர் என் ஜீவனானார்.***
***ஆகா ஹா இது அதிசயம் தானே***
***ஓ கோ கோ இது உண்மையும் தானே***

2010ம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டி ருக்கும் என் சகோதரனே! சகோதரியே!

***ஊரெல்லாம் சொல்லிடுவேன்***
***உலகமெங்கும் பறைசாற்றுவேன்***

என கர்த்தருக்குள் ஒரு பொருத்தனை செய்வீர்களா?

இயேசு சொன்னார்: **மாற்கு 16 : 15**

**நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.**

இன்று **"நற்செய்தி"** அறிவிக்கும் பணியே **பிரதானப் பணியாக** உள்ளது.

இயேசு பிறந்த நாள் முதல், அவர் மீண்டும் உலகை நியாயந்தீர்க்க வரும் வரை "**நற்செய்தி**" உலகமெங்கும் சர்வ சிருஷ்டிக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டிய தாயுள்ளது.

**லூக். 24 : 47,48** அன்றியும் **மனந் திரும்புதலும், பாவமன்னிப்பும்** எருசலேம் தொடங்கிச் **சகல தேசத்தா ருக்கும் அவருடைய நாமத்தினாலே** பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. **இவைகளுக்கு நீங்கள் சாட்சிகளா யிருக்கிறீர்கள்.**

ஆதலால் சகல ஜனங்களுக்கும் அவருடைய **அதிசயங்களை விவரித்துச் சொல்லுங்கள்.**

அப்பொழுது, அவர் உங்களை **அதிசயங்களைக் காணப்பண்ணுவார்.** ஏனெனில் அவர் நாமம் அதிசயமானவர்.

ஒலிமுகவாசலில் இருந்த குஷ்ட ரோகிகளான நாலுபேர் ஒருவரை ஒருவர் நோக்கி : **"நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்"** என்றார்கள்.

**மேய்ப்பர்கள் செய்த மற்றொரு முக்கிய காரியம்.லூக்கா 2 :20**

மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப் பட்டதின்படியே கேட்டு கண்ட எல்லாவற் றிற்காகவும் **தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக் கொண்டு திரும்பிப் போனார்கள்.**

இயேசு பிறந்த நாளிலே, மேய்ப்பர்கள் மூலமாக,

**1. சுவிசேஷ ஊழியம் ஆரம்பமானது.**
**2. துதி ஆராதனை ஆரம்பமானது.**

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே, தேவஊழியரே!

இந்த கிறிஸ்மஸ் நாட்களிலே, **சுவிசேஷ ஊழியத்தை** குறித்தும், **துதி ஆராதனையை** குறித்தும் திட்டமிடுங்கள். மேய்ப்பர்கள் நமக்கு மாதிரியாக இருக்கிறார்கள்.

இரட்சிக்கப்பட்ட ஜனமே, தேவ ஊழியரே **நீங்கள் சும்மாயிருப்பது நியாயமல்ல,**

**உங்கள் சபை சும்மா இருப்பது நியாயமல்ல,**
**உங்கள் பிள்ளைகள் சும்மா இருப்பது நியாயமல்ல.**
***இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்.***
**உங்களை அர்ப்பணிப்பீர்களா?**
**உங்கள் பிள்ளைகளை அர்ப்பணிப்பீர்களா?**

**இ ர ண் ட ா வ த ா க , சாஸ்திரிகளைப் பற்றி சிந்திப்போம்! மத்தேயு 2 : 1 , 2** ஏரோதுராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்த பொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, யூதருக்கு ராஜாக பிறந்திருக்கிறவர் எங்கே? **கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம்** என்றார்கள்.

ஆம், பிரியமானவர்களே! சாஸ்திரிகள் கிழக்கிலே நட்சத்திரத்தைக் கண்டு இயேசுவை பணிந்து கொள்ள வந்தார்கள்.

இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்குமுன் சென்றது.

அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்து கொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் துாபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.

பின்பு வேறு வழியாய் **தங்கள் தேசத்திற்கு திரும்பிப் போனார்கள்.**

சாஸ்திரிகளை கவனித்துப் பாருங்கள்.

1. இவர்கள் தங்கள் ஞானத்தினால் கிழக்கிலே நட்சத்திரத்தைக் கண்டு இயேசுவைக் காண வந்தார்கள்.

2. சாஷ்டாங்கமாய் விழுந்து உயர்ந்த காணிக்கைகளைப் படைத்தார்கள்.

3. வேறு வழியாய் தங்கள் தேசத்திற்குப் போனார்கள்.

**வந்தோம், பார்த்தோம், படைத்தோம், போனோம் என்று போய் விட்டார்கள்.**

1. ஆனால் மேய்ப்பர்களைப் போல, **நற்செய்தி சாஸ்திரிகளுக்கு தேவனால் அறிவிக்கப் படவில்லை.**

2. மேய்ப்பர்களைப் போல, தாங்கள் கண்டவற்றைக் குறித்து **சாஸ்திரிகள் பிரசித்தம் பண்ணவில்லை.**

3. மேய்ப்பர்களைப் போல, **தேவனை சாஸ்திரிகள் மகிமைப்படுத்தவோ** அல்லது **துதித்துக்கொண்டோ திரும்பவில்லை.**

கிறிஸ்மஸ் பண்டிகையை குதுகலமாக கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் தேவஜனமே!

மேய்ப்பர்களைப் போல தேவ தரிசனம் பெற்று, தீவிரமாய் மனந்திரும்பி இயேசுவைப் பற்றி நன்கு அறிந்து, அவரை பிரசித்தம் பண்ணி, அவரை மகிமைப் படுத்தி, துதி செலுத்த வாஞ்சிக்கிறீர்களா? அல்லது சாஸ்திரிகளைப் போல, நட்சத்திரங்களைக் கண்டு, பணிந்து, காணிக்கைப் படைத்து விட்டு செல்ல விரும்புகிறீர்களா?

**தீர்மானம் உங்களுடையது.**

மேய்ப்பர்கள் செய்த காரியத்தை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன்.

**1. தங்களுக்குச் சொல்லப் பட்ட இயேசுவின் நற்செய்தியை பிரசித்தம் பண்ணினார்கள்.**

**2. தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக் கொண்டு திரும்பிப் போனார்கள்.**

**இன்றே தீர்மானம் செய்யுங்கள்.**

இவ்வாறு தீர்மானிக்கும்போது

**கர்த்தர் உங்களை அதிசயங்களைக் காணப்பண்ணுவார்.**

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்யுங்கள்.

**கர்த்தர் என்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவார்.**
**சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களை விவரிப்பேன்.** ஆமென்.

# கோயம்புத்தூர் - சர்க்கார் சாமக்குளம் யூனியன் 100 - கிராம ஊழிய அறிக்கை

**தேதி : 18.10.2010 முதல் 22.10.2010 முடிய**



கர்த்தருடைய பெரிதான கிருபையால் கோயம்புத்தூர் மாவட்டம் – சர்க்கார் சாமக்குளம் யூனியனில் 18.10.2010 திங்கள் முதல் 22.10.2010 வெள்ளி வரை **"100 கிராம ஊழியம்"** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவு, இனிப்பு இவைகளை சித்ரா **A.G. சபை பாஸ்டர் V. டேனியல்** அவர்கள் பொறுப்பெடுத்து உதவி செய்தார்கள். தமிழ்நாட்டின் 11 மாவட்டங்களைச் சேர்ந்த 49 பேர் கலந்துகொண்டு ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் **சர்க்கார் சாமக்குளம்** யூனியனிலுள்ள எல்லா கிராமங்களின் பெயர்களையும் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.





இந்த ஜெபத்தில் நியூசிலாந்து தேசத்திலிருந்து **பாஸ்டர் விக்கி** அவர்கள் தலைமையில் 10 பேர் கொண்ட மிஷனெரி குழுவினர் கலந்துகொண்டு கிராம ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக ஜெபித்தார்கள். பாஸ்டர் விக்கி அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். TVGM ஸ்தாபகர் சகோ. **P.T. கிறிஸ்டோபர்** அவர்கள் வந்திருந்த யாவரையும் அன்போடு வரவேற்று, ஜெபத்தில் நடத்தினார்கள். பின்பு கிராம ஊழியர்களை 12 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக, ஆத்துமாக்களுக்காக ஜெபித்தார்கள். சித்ரா **A.G.** சபையின் சார்பில் மதிய விருந்து வழங்கப்பட்டது. இதன்பின் ஒவ்வொரு குழுவினரும் ஜெபத்துடன் கிராமங்களுக்குள் கடந்து சென்றார்கள்.

இவர்கள் போய் கிராமங்களில் தங்கிக் கொண்டு, கிடைக்கிற ஆகாரத்தை சாப்பிட்டு அலைந்து திரிந்து வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து இயேசுவை அறிவித்தார்கள். இந்த ஊழியத்தின் போது கிராமங்களில் 11,660 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 5000 **இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள்,** 10,000 இதர கைப்பிரதிகள் மற்றும் 10,000 சிலுவைக்கொடிகள் இலவசமாக கொடுத்து ஊழியம் செய்தார்கள்.

கடைசி நாள் ஊழியங்களை முடித்து கிராம ஊழியர்கள் யாவரும் மீண்டும் முன்புகூடிய இடத்திலேயே கூடி ஜெபித்து, கிராமங்களில் கர்த்தர் தங்களை எப்படியாக நடத்தினார் என்பதையும், கிராமங்களில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் சாட்சியாகச் சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த ஊழியத்தின் மூலம் சந்திக்கப்பட்டவர்களில் 96 புறமத நண்பர்கள் தங்களுடைய முகவரிகளைக் கொடுத்து வேதபாடங்களை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1: சகோ. சிவக்குமார், சகோ. ஆசீர்பாண்டி, சகோ. பாபு சாலமோன்.**

நேரு நகர் பகுதியில் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்து ஊழியம் செய்த போது சில வியாதியஸ்தர்கள் தங்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டார்கள். அவர்களுக்காக ஜெபித்தபோது கர்த்தர் சுகம் கொடுத்தார். இப்படி சுகம் பெற்றவர்கள் சர்ச்சுக்கு இனி போவோம் என்று சொல்லி இயேசுவுக்கு தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2: சகோதரி ராணி சந்திரா, சகோதரி மேரி மீனி, சகோதரி செல்லக்கனி, சகோதரி ஜோதி சாம்ராஜ்.**

எங்களுக்கு கொடுக்கப்பட்ட 10 கிராமங்களில் சென்று வீடுகள்தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். துக்கத்தோடு இருந்தவர்களை விசாரித்து ஜெபித்தோம். சுவிசேஷத்தைக் கேட்ட மக்கள் சந்தோஷத்துடன் இயேசுவே கடவுள் என்று ஏற்றுக் கொண்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3: சகோ. பால்ராஜ், சகோ. தாவீது, சகோ. இஸ்ரவேல், சகோ. செல்வராஜ்.**

கணபதி ஊராட்சியிலுள்ள 10 கிராமங்களை சந்தித்து வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். பிராமணர் குடியிருப்பு பகுதியில் அநேகர் சுவிசேஷபுத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். காந்திமாநகரில் மக்கள் ஆர்வமாக சுவிசேஷத்தைக் கேட்டு புத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4: சகோதரி மரியம்மாள், சகோதரி கிரேஸ் பத்மா, சகோதரி பாக்கியம், சகோதரி லூயிஸ் அம்மாள்.**

நாங்கள் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, சிலர் எங்களை அவர்கள் வீடுகளுக்கு அழைத்து ஜெபிக்கும்படி கேட்டார்கள். குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள், சுகவீனமுள்ளவர்களுக்காக ஜெபித்தோம். கர்த்தர் எங்களோடிருந்து நடத்தினார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 820 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5: சகோதரி எஸ்தர், சகோதரி பிச்சையம்மாள் சகோதரி தேவபாக்கியம், சகோதரி கிருபா பழனியம்மாள், சகோதரி எஸ்தர் எபிநேசர்.**

நாங்கள் 9 கிராமங்களில் சென்று வீடுகள்தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். யாவரும் சந்தோஷமாக வாங்கினார்கள். கிராமங்களில்

மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றார்கள். சுவிசேஷத்தை ஆர்வமாக கேட்டார்கள். மொத்தம் 955 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6: சகோதரி வசந்தா ஸ்டீபன்**
**சகோதரி அன்னக்கிளி,**
**சகோதரி ஜெபமணி,**
**சகோதரி மெர்ஸி ராஜ்.**

குன்னத்துார், மாணிக்கம்பாளையம், கணேசபுரம் ஆகிய கிராமங்களில் ஊழியம் செய்தபோது, சுவிசேஷப் புத்தகங்களை மக்கள் வாங்க மறுத்து விட்டார்கள். ஆனால் யாரும் எங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. **குடும்ப பாளையம்** கிராமத்தில் எங்களை ஊருக்குள் வரக்கூடாது என்று துரத்தி விட்டார்கள். ஆனாலும் இக்கிராமத்தில் ஒரு சிலர் யோவான் சுவிசேஷப் புத்தகம் கேட்டு வாங்கினார்கள். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7: சகோதரி லீதியாள்,**
**சகோதரி தேவகிருபை,**
**சகோதரி மணியம்மாள்,**
**சகோதரி சலோமி சம்மனசு.**

நீலாம்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். பல வீடுகளில் ஜெபித்தோம். யாவரும் சுவிசேஷத்தை ஆர்வமாக கேட்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8: சகோதரி தேவநேசம்,**
**சகோதரி எஸ்தர் கனகாம்புஜம்,**
**சகோதரி கிளமெண்ட்ஸ்மேரி,**
**சகோதரி லூர்துமேரி.**

இருகூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் இயேசுவை அறிவித்து யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். ஒரு சிலர் புத்தகங்களை வாங்க மறுத்தார்கள். ஒரு பெரியவர் எங்களிடம் எந்த ஒரு கடவுளும் வேண்டாம் போங்கள் என்றார். இன்னொருவர் ஏன் இப்படி உங்கள் மதத்தை பரப்புகிறீர்கள் என்றார். கண்ணம்பாளையம் கிராமத்தில் புத்தகம் கொடுக்கக்கூடாது என்றார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9: சகோதரி ரூத் கலாவாணி**
**சகோதரி ரெபேக்கா லட்சுமி,**
**சகோதரி தெபோராள்,**
**சகோதரி அன்னாள்.**

வரதராஜபுரம் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்து புத்தகங்கள் கொடுத்தோம். ஒரு அரிசி கடைக்காரர் எங்களை இங்கே புத்தகம் எதுவும் கொடுக்கக்கூடாது, மீறி கொடுத்தால் போலீஸில் பிடித்து கொடுத்துவிடுவேன் என்று மிரட்டினார். வெங்கடேசபுரம், சக்கரை செட்டியார்புரம் பகுதியில் ஊழியம் செய்தோம். அநேகருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1030 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10: சகோதரி கஸ்துாரி,**
**சகோதரி அந்தோணி மேரி,**
**சகோதரி அமிர்தம்,சகோதரி மரியாள்,**
**சகோதரி, ஷீலா அம்மாள்.**

நீலிக்கோணம்பாளையம் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் **இயேசுவே மெய்யான கடவுள்** என்று அறிவித்து, சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. சில வேதாகம கல்லுாரி மாணவர்கள் எங்களிடம் கவனமாக ஊழியம் செய்யுங்கள், எதிர்ப்புகள் இருக்கும் என்றார்கள். நாங்கள் ஜெபத்துடன் சென்று ஊழியம் செய்தோம். பலர் எங்களை ஜெபிக்கும்படி கேட்டார்கள்.

ஒரு சகோதரி தன் வீட்டு மாடியில் நின்று எங்களை கூப்பிட்டு, இன்று எங்களுக்காக ஜெபிக்க யாரும் வரமாட்டார்களா? என்று ஏங்கினேன். கர்த்தர் உங்களை கொண்டு வந்தார் என்றார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 875 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11: சகோ. பிரேம் ஆனந்த், சகோ.நோவா, சகோ.யோசுவா சகோ. அந்தோணி.**

நாங்கள் சென்ற கிராமங்களில் ஒரு சிலர் சுவிசேஷப் புத்தகங்களை வாங்க மறுத்தாலும் அநேகர் வாங்கினார்கள். இஸ்லாமிய மார்க்கமே பெரியது என்று கூறிய ஒரு இஸ்லாமிய சகோதரிக்கு குல்ஷன் எஸ்தர் என்ற பாகிஸ்தானிய சகோதரியின் சாட்சியை கூறியபோது, தானும் இனி கிறிஸ்தவ சபைக்கு வருவதாகச் சொன்னார்கள். ஒருவரிடம் நாங்கள் சுவிசேஷம் சொன்னபோது அவர் நான் ஒரு இந்தியன் என்றார். நாங்களும் இந்தியர்கள் தான் என்றோம். அவர் நான் ஒரு இந்து என்றார். நாங்களும் இந்துவாக இருந்து இப்போது இயேசுவை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று எங்கள் சாட்சிகளைக் கூறியபோது அவரால் மேற்கொண்டு பேச முடியாமல் போய் விட்டார். மொத்தம் 825 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12: சகோ. மாற்கு மாரியப்பன், சகோ. மகாராஜன், சகோ. ஜெபமலைநாதன், சகோ. பீட்டர் ராமலிங்கம்.**

காளப்பட்டி ஊராட்சியிலுள்ள கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். சிலர் வேண்டாம் என்றும், பலர் விருப்பத்தோடும் வாங்கினார்கள். ஒரு வீட்டில் யோவான் சுவிசேஷத்தை வைத்துவிட்டு வந்தோம். அதை அந்த வீட்டுக்காரர் எடுத்துக்கொண்டு, எங்களை விரட்டிக் கொண்டு வந்தார். நாங்கள் என்ன என்று கேட்டபோது, எங்களை மிரட்டி ஏன் இப்படி புத்தகத்தை வைத்தீர்கள், எங்கள் சாமியை நீங்கள் கும்பிடுங்கள் என்று சொன்னோமா? நீங்கள் ஏன் உங்கள் சாமியை பற்றி சொல்ல வந்தீர்கள், உடனே ஓடிப் போய்விடுங்கள், மீண்டும் இப்பகுதியில் உங்களைப் பார்த்தால் உயிருடன் திரும்பி செல்ல மாட்டீர்கள் என்று கூறினார். நாங்கள் ஜெபத்துடன் வேறு பகுதிக்கு போய் ஊழியம் செய்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

**100 – கிராம ஊழிய தன்னார்வத் தொண்டர்கள் அனைவருக்கும் எங்கள் அன்பின் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!**

**2010 டிசம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : திருப்பூர்
யூனியன் : பல்லடம்
நாள் : 04.12.2010 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**பாஸ்டர் . செபாஸ்டியன்
பெந்தெகொஸ்தே தேவசபை
75, இரட்சகர் வீதி
சாமளாபுரம் – 641 663.
மங்கலம் வழி,
பல்லடம் தாலுகா,
திருப்பூர் மாவட்டம்.
செல் : 98654 04716
99432 81640**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "100 - **கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

# நாகப்பட்டிணம் மாவட்டம் - குத்தாலம் யூனியன் 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** 2010 **டிசம்பர்** 13 திங்கள் காலை 9 மணி முதல் **டிசம்பர்** 17 வெள்ளி இரவு 10 மணி முடிய **குத்தாலம் யூனியனிலுள்ள கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து **"வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்"** இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** :2010 **டிசம்பர்** 13 திங்கள் காலை 9 - 1 மணி

**கடைசி நாள் ஜெபம் :** 2010 **டிசம்பர்** 17 வெள்ளி இரவு 7 - 10 மணி

**( 2010 டிசம்பர் 13 -17 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o.**நல்ல மேய்ப்பன் மிஷன் சபை**
**பெத்தேல் புரம், தேரிழந்தூர் - 609 808.**
**நாகை மாவட்டம். செல்: 94882 14627**

உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர்** R. **எபிதாஸ்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94871 92763**

**ஸ்தாபகர் சகோ. P.T. கிறிஸ்டோபர் – செல் : 94435 44628**

# ✷ இயேசு கிறிஸ்துவே கர்த்தர் ✷

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

### விசுவாசிகள் எழுதிய சாட்சி கடிதங்களின் சில வரிகள்:-

***1. சகோதரி லீமா சுப்ரமணியம், திருச்சி***

என்னுடைய T.C. கிடைத்ததற்கு கர்த்தருக்கு ஸ்தோத்திரம். மேலும் எனக்கு பணம் கிடைத்தால் சாட்சி எழுதுவதாக ஜெபித்தேன். பணம் கிடைத்துவிட்டது.

***2. சகோதரி எலிசபெத், கோவை.***

என் பேத்தியின் மேற்படிப்பிற்காகவும், மகன் சாமுவேல்ராஜ் திருமண காரியத்திற்காகவும் ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். தேவன் என் பேத்தியின் படிப்பை ஆசீர்வதித்து வருகிறார். மகனுக்கு திருமண காரியத்தை ஒழுங்கு செய்து தந்திருக்கிறார். தேவனுக்கே மகிமை.

***3. சகோதரி குளோரி, புதுக்கோட்டை.***

என் அக்கா மற்றும் தங்கையின் திருமணகாரியத்திற்காக ஜெபிக்கக் கேட்டிருந்தேன். கர்த்தர் இருவருக்கும் திருமணமாகும்படி செய்தார். சுகபிரசவத்திற்காக ஜெபிக்கக் கேட்டேன். கர்த்தர் சுகபிரசவத்தில் ஆண்குழந்தையை தந்தார்.

## காணிக்கை!

நீங்கள் காணிக்கை அனுப்பும் போது உங்கள் **முழுமுகவரி, தொலைபேசி, ஈமெயில், தொகை, நோக்கம்** யாவும் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

Bank to Bank மூலம் காணிக்கை அனுப்புகிறவர்கள் எந்த பேங்கில் அனுப்புகிறீர்களோ அந்த பேங்கில் தருகிற ரசீதை ஒரு ஜெராக்ஸ் எடுத்து எங்களுக்கு அனுப்பினால் நாங்கள் பேங்கில் சென்று கேட்பதற்கு வசதியாக இருக்கும்.

E.M.O. மூலம் அனுப்புவர்கள் முழு விபரத்தையும் தபால்/ஈமெயில் மூலம் TVGM-க்கு தெரியப்படுத்துங்கள்.

### புறமதநண்பர்கள் எழுதிய சாட்சி கடிதங்களின் சில வரிகள்:-

***1. சகோதரி ராஜேஸ்வரி, கோவை.***

என்னுடைய கோபகுணம் மாறி நன்றாக படிக்கவும், குடும்பத்தினரின் சுகத்திற்காகவும் ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு என் கோபகுணத்தை மாற்றினார். படிக்கும் ஆர்வம் தோன்றியது. வீட்டில் யாவரும் நலமுடன் உள்ளார்கள்.

***2. சகோ. அன்பழகன், வேலூர்.***

என் பேராசிரியர் மகளுக்கு ஏற்றத் துணை கிடைக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஏற்ற துணையை கொடுத்து, 19.11.2010 அன்று திருமணம் நடைபெற செய்தார்.

***3. சகோதரி அகிலா, திண்டுக்கல்.***

நான் கல்லூரிக்கு சென்ற ஆட்டோ பஸ்ஸில் மோதி விபத்திற்குள்ளானது. 2 பேர் இறந்து விட்டார்கள். நான் மயங்கியபடி ரோட்டில் கிடந்தேன். ஒரு வயதானவர் தண்ணீர் தெளித்தார். மயக்கம் தெளிந்தபோது ''ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு'' என்ற கர்த்தருடைய வார்த்தையை என்னையும் அறியாமல் சொன்னேன். எனக்கு தலையில் மட்டுமே அடிபட்டு இருந்தது. கர்த்தர் என்னை உயிரோடு காத்துக் கொண்டார்.

***4.சகோதரி புவனேஸ்வரி,க ாஞ்சிபுரம்***

என் அக்கா உயிருக்கு போராடிக் கொண்டிருந்த வேளையில் செப்டம்பர் மாத பத்திரிக்கையில் **''நான் உன்னை குணமாக்குவேன்''** என்ற வாக்குத்தத்த வசனம் வந்தது. நான் கண்ணீரோடு ஜெபித்தேன். கர்த்தர் பூரண சுகத்தைக் கொடுத்தார். மேலும் கர்த்தர் எனக்கு ஏற்ற கணவரை தந்தார்.

## 100 - கிராம ஊழியத்திற்கு 2011ம் ஆண்டின் தேவை!
## 2 லட்சம் யோவான் சுவிசேஷப் புத்தகம் தமிழ் O.V
## யோவான் புத்தகம் ஒன்றின் விலை – ரூ. 1 மட்டுமே.

கர்த்தருடைய கிருபையினால் 100–கிராம ஊழியத்திற்கு 2 லட்சம் யோவான் சுவிசேஷப் புத்தகம் சலுகை விலையில் தர I.B.L. நிறுவனத்தார் முன்வந்துள்ளார்கள். தேவனைத் துதியுங்கள்.

இவர்களுக்கு மாதந்தோறும் ரூ.20,000 வீதம் 10 மாதத்திற்குள் ரூ.2 லட்சம் தருவதாக விசுவாசத்தில் வாக்களித்துள்ளோம்.

**ஜெபியுங்கள்! உங்கள் பங்கை நிறைவேற்றுங்கள்!**

சகல தொடர்புகளுக்கும் : **டி.வி.ஜி.எம், 100–கிராமம், திருச்சி – 620 102.**

## அழைக்கப்பட்ட, அர்ப்பணித்தவர்கள் தேவை!

1. TVGM தலைமை அலுவலகம் – திருச்சி.
2. TVGM அறிமுகப்பணி அலுவலகம் – நாகர்கோவில்
3. TVGM புதிய அறிமுகப்பணி அலுவலகம் – பாளையங்கோட்டை
   (உள்ளூரில் உள்ளவர் மட்டும்)

**குறிப்பு :**

1.திருச்சி, நாகர்கோவில் அலுவலகத்தில் தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு. உதவித்தொகை வழங்கப்படும். எதிர்கால சேமிப்புத் திட்டங்கள் உண்டு.
2. தமிழ், ஆங்கிலம் இரண்டும் கம்ப்யூட்டரில் டைப் தெரிந்தவர்கள் மிகவும் முக்கியமாக தேவைப்படுகிறார்கள். (தெரியாதவர்களும் விண்ணப்பிக்கலாம்).
3. TALLY அல்லது வேறு Software– ல் Account maintain பண்ண தெரிந்தவர்களும், மிக முக்கியமாக நல்ல ஞாபகசக்தி உள்ளவர்களும், சுறுசுறுப்பாக செயல்படுபவர்களும் தலைமை அலுவலகத்திற்கு தேவை.
4. அம்பாசிட்டர் கார் ஓட்ட லைசன்ஸ் உள்ள டிரைவர் தேவை. எந்த வேலையானாலும் செய்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்.
5. ஆண்கள் சிறுவர் இல்லத்தைக் கவனிக்க (1 – 12 வகுப்புகள்) வார்டன் தேவை.
6. உங்கள் ஊரில் இருந்து கொண்டே TVGM Volunteers ஆக செயல்பட்டு, உண்டியல் காணிக்கை சேகரித்து அனுப்ப ஆட்கள் தேவை.

சகல தொடர்புகளுக்கும் : **டி.வி.ஜி.எம், 100–கிராமம், திருச்சி – 620 102.**

### நாகர்கோவில் கிளை அலுவலக தேவைகளுக்காக ஜெபியுங்கள்

1. ஊர் ஊராக சென்று ஜெபிக்க ஆம்னி வேன் தேவை.
2. அறிமுகப்பணி அலுவலகத்திற்கு சொந்த கட்டிடம் தேவை.
3. அறிமுகப்பணிக்கு ஆர்வமுள்ள சகோதரிகள் தேவை.

**சகோதரி ஷோபனா இவான்சலின், குமரி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்.**
**5 / 3A** கிரவுண் தெரு, வாத்தியார் விளை, நாகர்கோவில் – 629 001
செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

## 100 - கிராம ஊழியம் பத்திரிகை வாசகர்களுக்கு எங்கள் அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!



### கிறிஸ்மஸ் நாட்களில் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள், ஊழியர்கள், தொழுநோயாளர்கள், விதவைகளை நினைவுகூருங்கள்!

| ஊழியங்கள் | ஒரு நபருக்கு | மொத்த நபர்கள் |
|---|---|---|
| சிறுவர் இல்லம் கிறிஸ்மஸ் துணி | ரூ. 300 | 70 |
| அலுவலக ஊழியர் அன்பளிப்பு | ரூ. 1,000 | 40 |
| ஊழியர் குடும்பம் அன்பளிப்பு | ரூ. 2,000 | 4 |
| 100 கிராம ஊழியர் அன்பளிப்பு | ரூ. 500 | 60 |
| விதவைகள், முதியோர் அன்பளிப்பு | ரூ. 250 | 40 |
| தொழுநோயாளர் அன்பளிப்பு | ரூ. 100 | 300 |
| பார்வையற்றோர் அன்பளிப்பு | ரூ. 100 | 100 |
| கிறிஸ்மஸ் நிகழ்ச்சி பரிசு, விருந்து | ரூ. 100 | 250 |

**மொத்தம் ( உத்தேசமாக) ரூ.1,74,000**

**இப்மாபெரும் தேவையில் உங்கள் பங்கை நிறைவேற்றுங்கள்!**

**TVGM, 100 - கிராமம், திருச்சி – 620 102.**

**ஆலயத்தைக் கட்டுங்கள், அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன்.. ஆகாய் 1:8.**

## சூறாவளிப்பட்டி கிராமம் ஜெபவீடு தேவை!

பல ஆண்டுகளுக்கு முன்னால் நாசரேத் **சகோ.ராபின்சன்** அவர்கள் ***திருச்சி - சூறாவளிப்பட்டி***யில் ஜெபவீடு கட்டுவதற்கு 3 சென்டு நிலம் TVGM-க்கு காணிக்கையாக வாங்கிக் கொடுத்தார்கள். இங்கு விதவைகளுக்கு TVGM மூலம் அவ்வப் போது, உணவு வழங்கி வருகிறோம். **பாஸ்டர் தேவதாஸ்** மூலம் ஞாயிறு ஆராதனையும் நடைபெற்று வருகிறது. இங்கு 15 X 30’ அளவில் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தை *2011*ம் ஆண்டு ஜனவரி மாதம் ரூ.***2,25,000***க்குள் கட்டுவதற்கு ஜெபித்து வருகிறோம். ஜெபியுங்கள். உதவுங்கள்.

**TVGM, 100 - கிராமம், திருச்சி – 620 102.**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள்:*** 2011 ஜனவரி 3 திங்கள் அன்று TVGM முழுநேர ஊழியர்கள், தன்னார்வத் தொண்டர்கள் யாவரும் கூடி ஜெபித்து, துதித்து ஊழியங்களை துவங்கும்படியாக ஜெபியுங்கள்.

2011 **ஜனவரி 4** முதல் 100–கிராம ஊழியர்கள் மற்றும் நடமாடும் சுவிசேஷக் குழு மூலமாக **புதுக்கோட்டை** மாவட்டம் – **ஆலங்குடி** தாலுகாவிலுள்ள ஒவ்வொரு கிராமங்களுக்கும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுக்கப்பட்டு சுவிசேஷமயமாக்கப்பட ஜெபியுங்கள்.

***செவ்வாய்:*** '**இயேசுவுக்கு சாட்சிகள்**' என்ற தலைப்பில் இரட்சிக் கப்பட்ட விசுவாசிகள், ஊழியர்கள் சாட்சிகள் CD, DVD, T.V. மூலமாக வெளி வர ஜெபியுங்கள்.

***புதன் :*** TVGM ஊழியங்களுக்காக சிறு சிறு ஜெபக்குழுக்கள் ஒவ்வொரு இடத்திலும் எழும்பவும், மாதந்தோறும் பொருளுதவியினால் தாங்கும் சபைகள், விசுவாசிகளை கர்த்தர் கிருபையாக அனுதினமும் எழுப்ப ஜெபியுங்கள்.

***வியாழன் :*** TVGM தலைமை அலுவல கத்தில் தங்கியிருந்து ஆராத னைகள் நடத்தவும், ஆவிக்குரிய ஆலோசனை கொடுக்கவும், ஆத்தும பாரமுள்ள கிராம தரிசனம் பெற்ற மூத்த போதகரை கர்த்தர் கிருபையாக தரும்படியாக ஜெபியுங்கள்.

***வெள்ளி :*** TASOL தரிசனத்தின் மூலம் உயர் மட்ட அளவில் கிறிஸ்தவ அதிகாரிகள் எழும்ப ஜெபியுங்கள்.

TASOL நிலம் விலை உத்தேசமாக 30 லட்சம். இதுவரை 3 லட்சம் காணிக்கை வந்துள்ளது. கர்த்தர் கிருபையாக மீதி 27 லட்சத்தை தமக்கு சித்தமானவர்கள் மூலம் சந்திக்கும் படியாக ஜெபியுங்கள்.

***சனி :*** 2010 டிசம்பர் 9,10 ஆகிய தினங்களில் ஒரிஸா கந்தமால் மாவட் டத்தில் நடைபெறும் ஊழியர் ஐக்கியக் கூட்டத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், குருந்தன்கோடு, மீடியாக்கியா கிராமங் களில் கட்டப்பட்டிருக்கும் ஜெபவீடு களுக்கு கல்வெட்டு பதிக்கப்படவும் ஜெபியுங்கள்.

2011ல் ஒரிஸாவில் புதிய ஜெபவீடுகள் கட்டுவதற்கு விசுவா சத்தில் இடங்களை அடையாளம் கண்டு வர ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** TVGM தலைமை அலுவலகத்திற்கும், கிளை அலுவலகத் திற்கும் அர்ப்பணிப்புள்ள, அழைக்கப் பட்ட கர்த்தருடைய பிள்ளைகள் கிடைக்க ஜெபியுங்கள்.

TVGM க்காக ஜெபிக்கிற, கொடுக்கிற, உழைக்கிறவர்களுக்காக ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7

**TVGM தலைமை அலுவலக முகவரி**

100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )
பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-


BRO.STEPHEN CHRISTOPHER, C.E.O.

**TAMIL VILLAGE GOSPEL MISSION**

"100 - VILLAGE"
SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

Founder : Bro .P.T. Christopher CELL : 94435 44628

STD Ph : 0- 431 - 2607241
Email : 100village@tvgm.org
Bro.Stephen CELL : 94871 92763


*மாதாந்திரப் பத்திரிக்கை*
'100 கிராம ஊழியம்' தமிழ் / ஆங்கிலம்
ஆண்டு சந்தா – ரூ. 25 /– இந்தியா.

*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம்,
'100 கிராம ஊழியம்' அறிக்கை,
மாதாந்திர வாக்குத்தத்த செய்தி
மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள்
வெளியிடப்பட்டு வருகிறது.

டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும்
தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும்
TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள்
Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு**
**டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)
T.V.G.M. SOCIAL SERVICE ( சிறுவர் இல்லம் ) 80G வரிவிலக்கு உண்டு
T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

( அல்லது ) சகல ஊழியங்களுக்கும்
MR. STEPHEN CHRISTOPHER,
SB A/c No:12491010 18538 CANARA BANK, Puthur Branch, TRICHY.
இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

## TVGM சிறுவர் இல்லம்


குண்டல் சிறுவர் இல்லம்


திருச்சி சிறுவர் இல்லம்

2010 அக்டோபர் மாதத்தில் சகோ. ஜோஸ்வா பிரின்ஸ், சகோதரி ஜெனிட்டா, சகோதரி லிடியா, பாஸ்டர் விக்கி, சகோதரி ஷீலா, சகோ. ஜான் ராஜசேகரன் ஆகியோர் திருச்சி சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு உணவளித்தார்கள்.

**சோமரசம்பேட்டை பஞ்சாயத்து தலைவர் திரு. ராஜாங்கம்** தனது 10வது திருமணநாளில் மனைவி மற்றும் உதவியாளர் ஆனந்த் அவர்களுடன் வந்து பிள்ளைகளுக்கு கேக் வழங்கினார்கள். **சகோ.ஆரோக்கியராஜ்** தேர்வில் வெற்றி பெற்ற பிள்ளைகளுக்கு அன்பளிப்புகள் வழங்கினார்கள்.

TVGM தலைமை அலுவலகத்தில் பணிபுரிந்த **சகோதரி ஷோபியா ஸ்டீபன்** குண்டல் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு உணவளித்தார்கள்.

To

**Return Requested:**

TVGM , Hundred Village,
Somarasampettai, Trichy - 620 102. India.